24.02.2026

O.S.No. 128/2023

PW1- பரமசிவன் – த/பெ.சண்முகசுந்தரம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாய தொழில் செய்து வருகிறேன்.

3. ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை.

4. வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு யார் விவரங்கள் கூறினார்கள் என்றால் நானும் என் தங்கையும் கூறினோம்.

5. இவ்வழக்கைப் பொறுத்து 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

6. கடந்த 12.01.1967ம் வருடம் 53 சென்டில் பிரிவின்றி 3ல் 2 பாகம் கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ.1ல் துலங்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் சர்வே எண் 384 ஏ/2 என்றால் சரிதான்.

7. சர்வே எண்.384ஏ/2 தற்போது 3 உட்பிரிவுகளாக 384ஏ/2ஏ1, 384ஏ/2ஏ2 மற்றும் 384ஏ/2பி பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. என் ஆவணப்படி 3 ல் 2 பாகம் என யார் பிரித்துக்கொண்டார்கள் என்ற விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள நபர்கள் 3 ல் 1 பங்கை பிரித்துக் கொண்டார்களா இல்லையா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

10. சர்வே எண்.384 ஏ/2 ன் மொத்த விஸ்தீரணம் 53 சென்ட் என்றால் சரிதான்.

11. சர்வே எண்.384 ஏ/2 ல் 2 பங்கு மட்டுமே எனக்கு பாத்தியம் என்றால் சரிதான் மீதம் ஒரு பங்கு எனக்கு பாத்தியமில்லை என்றால் சரிதான்.

12. தபசில் சொத்தானது சர்வே எண்.384 ஏ/2 ஏ 2 என்றால் சரிதான். அது நடுப்பகுதி என்றால் சரிதான்.

13. தபசில் சொத்திற்கு மேல்பக்கம் உள்ள இடம் வடிவேல் நாடார் வாரிசுகள் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண்.384 ஏ/2 ஏ 1 என்றால் சரிதான்.

14. சர்வே எண்.384 ஏ/2 ஏ 2 க்கு கீழ்பக்கம் உள்ள இடம் சர்வே எண்.384 ஏ/ 2 பி என்றால் சரிதான். அந்த இடம் எங்கள் கைவசம் உள்ளது என்றால் சரிதான்.

15. சர்வே எண்.384 ஏ/2 பி என்ற இடத்தை நாங்கள் கதிரவன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான்.

16. நாங்கள் எப்போது கிரையம் கொடுத்தோம் என்றால் தேதி நினைவில்லை சுமார் 20 வருடத்திற்கு முன்பு கிரையம் கொடுத்தோம்.

17. நாங்கள் கிரையம் கொடுத்த சர்வே எண்.384 ஏ/2 பி–ன் விஸ்தீரணம் 27 செண்ட் என்றால் இல்லை 26 செண்ட்.

18. நாங்கள் கிரையம் கொடுத்த இடத்திற்கு மேல்பக்கம் தான் தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

19. நாங்கள் கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் மேல்பக்கம் கையிருப்பு சொத்து இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

20. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.384 ஏ/3 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.384 ஏ/3 ல் 14 செண்டில் 10.1/2 செண்ட் கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

22. வா.சா.ஆ.2 கிரைய சொத்தை தவிர வேறு இடம் எதுவும் சர்வே எண்.348 ஏ/3 ல் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான்.

23. சர்வே எண்.384 ஏ/3 ல் உள்ள 14 செண்ட் ஆனது சர்வே எண்.384 ஏ/3 ஏ 1 மற்றும் 3 ஏ 2 என 2 பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்

24. சர்வே எண்.384 ஏ/3 ல் கண்ட மேல்பக்க இடத்தை தான் வடிவேல் நாடார் வகையறா கைவசம் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

25. வடிவேல் நாடாருக்கு எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகம் மூலம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இவை அனைத்தும் போக சர்வே எண்.384 ஏ/3 ல் மேல்பக்கம் சர்வே எண்.384 ஏ/3 ஏ 1 ஆக உட்பிரிவு செய்யப்பட்டு 10.96 சென்ட் வடிவேல் நாடார் வாரிசுகள் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு நேர் வடபக்கம் சேர்ந்தணையாக 20 சென்ட் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

26. என் பிராது படியும், ஆவணப்படியும் கீழ் பக்கம் 27 சென்ட். மேல்பக்கம் 20 சென்ட் எங்கள் வகையறாவிற்கு இடம் உள்ளது என்றால் சரிதான். எனவே மொத்தம் 47 சென்டிற்கு மேல் சர்வே எண்.384 ஏ/2 ல் இடம் இல்லாததால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

27. வழக்கு சொத்தைப் பொறுத்து என் பெயரிலோ, என் மூதாதையார் பெயரிலோ உள்ள வருவாய் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்

28. தற்போது வழக்கு சொத்தின் வருவாய் ஆவணங்கள் 1,2 பிரதிவாதிகளின் மூதாதையர் பெயரில் இருந்தது என்றால் சரிதான்.

29. வழக்கு சொத்திற்கு பிரதிவாதிகள் தான் தீர்வை ரசீது செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

30. என் வழக்கு தவறான வழக்கு என்றும் ஆவணத்திற்கு முரணாக நான் உரிமை கோருவதால் முரண்தடை தோஷத்தால் என் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி